# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.C.C.1564/2025 |
| Miscellaneous | : | . |
| Preliminary Register | : | . |
| Deposition of Witness for | : | . |
| Prosecution | : | . |
| Defence | : | அ.சா.3 |
| Name | : | ஆறுமுகம், உதவி ஆய்வாளர், வந்தவாசி வடக்கு காவல் நிலையம் |
| Father's Name | : | .பெரியசாமி |
| Village | : | . |
| Taluk | : | . |
| Calling | : | . |
| Religion | : | இந்து |
| Age | : | .59 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 12.11.2025.

**எதிரிகள் ஆஜர்.**

முதல் விசாரணை

நான் தற்போது வந்தவாசி வடக்கு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.8.2024ம் தேதி அவருடன் கரவணன், விக்னேஷ் காவலருடன் மதுபான தடுப்பு சம்மந்தமாக சலுக்கை கிராம ரங்கநாதன் டவுன்சிப் காலிமனை அருகில் ரோந்தில் இருந்தபோது அங்கு 1ம் எதிரி கார்த்திக், 2ம் எதிரி சுரேஷ் வெள்ளை நிற சாக்குபையில் 180 எம்.எல் அளவு கொண்ட கோல்டன் மாணிடர் பிராந்தி 55 பாட்டில்கள் மெக்ளின் பிராந்தி பாட்டில்கள் 60 மொத்தம் 115 பாட்டில்களை சாட்சிகள் ஜோதி, சுரேஷ்

முன்னிலையில் கைபற்றினேன். அந்த கைபற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.5. 20.08.2024ம் தேதி 13.50 மணிக்கு 2ம் எதிரி சுரேஷ் என்பவரிடமிருந்து டி.என்.97 வி 9776 ஈரோ ஸ்பிலெண்டர் என்ற இருசக்கர வாகனம் மற்றும் ரூ.850/- கைபற்றுதல் மகசரில் அதே சாட்சிகள் முன்னிலையில் கைபற்றினேன் அது அ.த.சா.ஆ.6 ஆகும். கைபற்றப்பட்ட 115 பாட்டில்கள் சா.பொ.1 வரிசை கைபற்றப்பட்ட இருசக்கர வாகனம் சா.பொ.2, கைப்பற்றப்பட்ட ரூ850/- சா.பொ.3 ஆகும். வழக்கு சொத்துக்களுடன் எதிரியை நிலையம் கொண்டுவந்து நிலைய குற்ற எண்.135/2024 பிரிவு 4 (1)(C), 4 (1)(A) தமிழ்நாடு மதுவிலக்கு திருத்தச்சட்டம் 2024ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன் அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.7 ஆகும். பின்பு எதிரிகளையும் வழக்கு சொத்தையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளார். வழக்கின் புலன்விசாரணை முடித்து எனக்கு பின்னால் வந்த புலன்விசாரணை அதிகாரி எதிரிமீது பிரிவு 4 (1)(C), 4 (1)(A) தமிழ்நாடு மதுவிலக்கு திருத்தச்சட்டம் 2024ன் கீழ் வழக்கு பதிவு இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

இவ்வழக்கில் புகார்தாரரும் புலன் விசாரணை அதிகாரியும் நான்தான் என்றால் சரிதான். இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் எனது கீழ் பணிபுரியும் காவலர்கள் என்றால் சரிதான். பொதுமக்கள் யாரையும் சாட்சியாக போடவில்லை. இவ்வழக்கில் எதிரிகளிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு சொத்துக்களை எதிரிகளை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது வழக்கு சொத்துக்களை ஆஜர் செய்யவில்லை என்றால் சரிதான் பின்னிட்டுதான் ஆஜர் செய்தோம். நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகள்மீது ஏற்கனவே வழக்குகள் இருந்ததால் நிலைய புள்ளியல் கணக்கிற்காக எதிரிகள்மீது பொய்யாக வழக்கு பதிவு செய்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் எதிரிகளை கைது செய்தபோது வழக்கு சொத்துக்களை கைபற்றியிருந்தால் அங்குள்ள பொது மக்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றிருப்போம் என்றால் சரியல்ல. எதிரிகளிடமிருந்து கைபற்றிய வழக்கு சொத்துக்களை பரிசோதனைக்காக அனுப்பி தடவியல் துறை ஆய்வறிக்கை பெறப்படவில்லை என்றால் சரிதான். சிறப்பு உதவி ஆய்வாளர் குவிமுச பிரிவு மற்றும் மதுவிலக்கு சட்டத்தின்படி புலன்விசாரணை செய்ய அதிகாரம் இல்லையென்று சொன்னால் சரியல்ல. மாதிரிக்காக மது பாட்டில்கள் எதுவும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கில் எதிரிகள் வழக்கு சொத்தினை வைத்திருக்க பயன்படுத்தியதாக சொல்லுகின்ற வெள்ளைநிற சாக்குபையை கைபற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் கோப்புகளில் இல்லையென்றால் சரிதான்.